இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 27-07-2024

# பொருளாதாரப் பூஜ்யம்

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கான திட்டங்கள் பூஜ்யம் என்பது மட்டுமல்ல, இந்தியப் பொருளாதாரமே பூஜ்யம்தான் என்பதைத்தான் அந்த அறிக்கை உணர்த்துகிறது. ஆணவம் கண்ணை மறைக்க, அகங்காரம் வார்த்தையில் தெறிக்கச் செயல்படும் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் இருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?**

**‘நீங்கள் ஏன் தேர்தலில் நிற்கவில்லை?’ என்று கேட்டபோது, ‘என்னிடம் அந்தளவுக்குப் பணமில்லை’ என்று சொன்ன ஜனநாயகக் காப்பாளர்தான் நிர்மலா சீதாராமன். தேர்தலில் நிற்காவிட்டால் என்ன, அவருக்குதான் ‘கோட்டா’ இருக்கிறதே? அந்த அடிப்படையில் நிரந்தர அமைச்சராகத் தொடர்கிறார். அதுவும் இந்திய நாட்டின் நிதித்துறையையே கவனிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்து விடுகிறது. இதில் இவரை எல்லாம் தமிழ்நாடு பட்டியலில் சேர்ப்பது மாபெரும் அவமானம் அல்லவா?**

“ஒன்றிய அரசின் மீது மக்கள் நம்பிக்கை வைத்து மூன்றாவது முறையாக ஆட்சியில் அமர்த்தி உள்ளனர். உலகம் முழுவதும் பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மை நிலவும் சூழலில் இந்தியாவின் வளர்ச்சி ஒளிமயமாக உள்ளது. இந்தியாவின் பணவீக்கம் குறைவாகவே இருந்து வருகிறது” என்று முன்னுரை வாசிக்கிறார் நிர்மலா சீதாராமன். முதல் கோணல் முற்றும் கோணலாக அமைந்துள்ளது அவரது மொத்த உரையும்.

விலைவாசி நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே இருக்கிறது. பணவீக்கம் உயர்ந்து கொண்டே இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிக் கொண்டே போகிறது. ஒன்றிய அரசின் முதலீடுகளால் புதிதாக எந்த நிறுவனங்களும் உருவாக்கப்படவில்லை. தனியார் முதலீடுகளிலும் மந்த நிலைமை இருக்கிறது. இவை எதுவும் மாறுவதற்கான முன்னெடுப்புகள் இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை. அதாவது, இந்தியப் பொருளாதாரத்தை உயர்த்தும் புதிய பாணி எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்படவில்லை.

**பொய்யான புள்ளிவிபரங்களை அள்ளித் தெளித்து இந்தியப் பொருளாதாரம் வளர்வதைப் போன்ற மாயத் தோற்றத்தைக் காட்டுகிறார்கள். ஜி.டி.பி. குறித்த இவர்களது தரவுகளே மோசடிகள் ஆகும். 8.2 விழுக்காடு வளர்ச்சி இருக்கும் என்று சொல்வதும் மாயத்தோற்றமே.**

ஏழைகள், பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள் என்று சொன்னால் போதுமா? இந்த நான்கு தரப்பின் முன்னேற்றத்துக்கும் செய்து தரப்பட்ட திட்டங்கள் என்ன என்று சொல்ல வேண்டாமா?

‘அனைவருக்குமான பட்ஜெட்’ என்கிறார் பிரதமர். அவருக்கு இப்போது பீகாரும், ஆந்திராவும்தான் இந்தியா போலும். ஒரு காலத்தில் உ.பி.யும், குஜராத்தும் மட்டுமே இந்தியா என்று நினைத்தவர், இன்று நிறம் மாறி இருக்கிறார்.

நிதி ஆணையத்தின் மானியங்கள் படிப்படியாகக் குறைக்கப் பட்டுள்ளன. ரசாயன உர மானியமும், உணவு மானியமும் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளும் ஏழை எளிய மக்களும் பாதிக்கப்படுவார்கள். மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துக்கான நிதி குறைக்கப்பட்டதன் மூலம் கிராமப்புற மக்கள் பாதிக்கப்படுவார்கள். கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது கல்வி, மருத்துவம், வேளாண்மை ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு குறைந்துள்ளது. இராணுவத்துக்கு 6.22 லட்சம் கோடி ரூபாய் என்பதும், மருத்துவத்துக்கு 89, 287 கோடி என்பதும் பா.ஜ.க. அரசின் சிந்தனை எந்த வகைப்பட்டது என்பதை உணர்த்தும். இராணுவத்தை விட கல்விக்கு ஒதுக்கப்பட்ட தொகை மூன்று மடங்கு குறைவானது.

9 துறைகளுக்கு முன்னுரிமை என்கிறார் நிதி அமைச்சர். விவசாயம், வேலைவாய்ப்பு, மனிதவளம், சமூகநீதி,சேவை, நகர்ப்புற வளர்ச்சி, எரிசக்தி, ஆராய்ச்சி - இப்படி வரிசைப்படுத்துகிறார். கேட்க நன்றாக இருக்கிறது. இதற்கான திட்டங்களும், நிதி ஒதுக்கீடும் என்ன? எவ்வளவு? என்பதைச் சொல்ல வேண்டாமா? இதற்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் குறைவு. புதிய திட்டங்கள் இல்லை.

‘அடுத்த தலைமுறை சீர்திருத்தங்கள்’ என்பது நிதி அமைச்சரின் ஒன்பதாவது இலக்கு. அதற்கான ஒரே ஒரு திட்டத்தையாவது சொல்லுங்கள். முடியுமா?

4 கோடி பேருக்கு வேலை வாய்ப்புகள் என்கிறது புதிய பட்ஜெட். ஆனால் 2014 ஆம் ஆண்டு சொன்ன 10 கோடி வேலை வாய்ப்புகள் என்ன ஆனது? இதுவரை பதில் இல்லை. ‘விவசாயிகளுக்கு விளைச்சல் செலவினத்தை விட 50 சதவிகிதம் கூடுதலாக குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம்’ என்று புதிய பட்ஜெட் சொல்கிறது. வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமி நாதன் அறிக்கையை பத்தாண்டுகளாக கிடப்பில் போட்ட பாவத்துக்கு இனியாவது பரிகாரம் காணப்படுமா?

அந்நியக் கார்ப்பரேட் நிறுவனங்கள் கட்டுகிற வரியைக் கவனமாகக் குறைத்துள்ளார்கள். ஆனால் சிறுகுறு நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. ரயில்வே துறைக்கு திட்டங்களே இல்லை. ‘அக்னி பாத்’ குறித்த அறிவிப்பு இல்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு குறித்த நிலைப்பாடு இல்லை.

**இந்திய நாட்டின் ஏற்றத்தாழ்வை நீக்குவதற்கான முயற்சியில் ஒரு துளியாவது அக்கறை இருந்ததா? விலைவாசியைக் குறைக்கும் திட்டம் இருக்கிறதா? உணவுப் பொருட்களின் விலையைக் குறைக்கும் திட்டம் சிந்திக்கப்பட்டுள்ளதா? புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதா?**

**ஏதுமில்லை. அதனால்தான் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கை, இந்தியப் பொருளாதாரத்தை பூஜ்ய நிலைக்குக் கொண்டு போய் நிறுத்திவிடும் ஆபத்து கொண்டது ஆகும்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.7.2024) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் நெடுஞ்சாலைப் பாலங்களுக்குரிய மேற்கட்டுமானத்திற்கான தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள், 11 தொகுதிகளாக மாநில நெடுஞ்சாலைத் துறையின் திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு, அலகினால் வடிவமைத்துத் தயாரிக்கப்பட்டுள்ள “STANDARD PLANS FOR HIGHWAY BRIDGES RCCT BEAM AND SLAB SUPER STRUCTURE” என்ற புத்தகங்களை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் இரா. செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (26.7.2024) தலைமைச் செயலகத்தில், விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவ சங்க பிரதிநிதிகள் பி.சேசுராஜா, ஆர்.சகாயம், ஆல்வின், ஏ.எடிசன், இரவிச்சந்திர ராமவன்னி, எஸ்.பி.ராயப்பன், ஜெபஸ்தியன் வினோபா, மூடியப்பன், இன்னாசி முத்து, அந்தோணி விஜின், ராஜ் குமார், அசன் முகைதீன், தாஜீதீன், ஜாகீர் உசேன், சௌந்தரபாண்டியன், விஜயராமன், செல்வம் ஆகியோர் சந்தித்து, மீனவ மக்களுக்காக தமிழக வரலாற்றிலேயே முதல்முறையாக மீனவர் நல மாநாடு நடத்தி மீனவ மக்கள் பயன்பெறும் வகையில் பல நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருவதற்காக நன்றி தெரிவித்து, இலங்கைக் கடற்படையினரால் இராமநாதபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்ட மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருவதால், அவர்களது படகுகளை மீட்டுத் தரவும், கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள மீனவர்களை விரைவில் விடுதலை செய்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். இச்சந்திப்பின்போது, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாஷா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ந.கௌதமன், மீன்வளத்துறை இயக்குநர் திருமதி ஆர். கஜலட்சுமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மாதாந்திர அட்டவணைப்படி காவிரி நீர் வழங்க வேண்டும்!

# மேகதாது திட்டத்துக்கு ஒருபோதும் அனுமதி தரக் கூடாது!

## புதுடெல்லியில் ஒன்றிய அமைச்சரிடம் – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தல்!

**புதுடெல்லி, ஜூலை 27 - தமிழ்நாட்டிற்கு மாதாந்திர அட்டவணைப்படி காவிரி நீர் வழங்க வேண்டும்; மேகதாது அணைத் திட்டத்துக்கு ஒருபோதும் அனுமதி அளிக்கக்கூடாது என்பன உள்ளிட்ட 6 கோரிக்கைகளை ஒன்றிய ஜல் சக்தி துறை அமைச்சரிடம், தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேரில் வலியுறுத்தி உள்ளார்.**



தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (25-07-2024) புதுடெல்லியில், ஒன்றிய அரசின் ஜல் சக்தி துறையின் அமைச்சர் சி.ஆர். பாட்டீல் அவர்களையும், ஒன்றிய ஜல் சக்தி துறையின் இணை அமைச்சர்கள் வி.சோமண்ணா, ராஜ்பூஷன் சௌத்திரி அவர்களையும் சந்தித்து தமிழ் நட்டின் பன்மாநில நதிநீர் பிரச்சினைகள், நதிநீர் இணைப்பு திட்டங்களை செயல்படுத்துதல், பாசன கட்டமைப்புகளை சீரமைக்கும் திட்டங்களுக்கு நிதியுதவி பெறுதல் ஆகிய கோரிக்கைகள் அடங்கிய மனுவினை வழங்கினார். அதன் விவரங்கள் பின்வருமாறு;

1. **காவிரி பிரச்சினை**

i)கர்நாடகா காவிரி நீரை தமிழ்நாட்டிற்கு மாதாந்திர அட்டவணைப் படி அளிப்பது குறித்து;

உச்சநீதி மன்றம் 16.02.2018 அன்று அளித்த தீர்ப்பின்படி மாதவாரியாக பில்லிகுண்டுலுவில் நீரை அளிக்க அறிவுறுத்துமாறு கோரப்பட்டது.

**ii) மேகதாது அணை திட்டம்:**

கர்நாடகா உத்தேசித்துள்ள மேகதாது திட்டம் தமிழ் நாட்டிற்கு பாதிப்பை விளைவிக்கும், என்பதால் அதற்கு ஒருபோதும் அனுமதி அளிக்கக்கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டது. மேலும் காவிரி படுகையில் நீர்பற்றாக்குறை காலங்களில் விகிதாசாரத்தின் படி நீரை பங்கீடு செய்ய அறிவியல் பூர்வ விதிமுறையை (formula வை) நிர்ணயிக்க ஆணையத்தை வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

**iii) வெண்ணாறு பாசன கட்டமைப்பை நவீனப்படுத்துதல் திட்டம் 2:**

காவிரியின் கிளை நதியான வெண்ணாற்றின் உபபடுகையில் உள்ள பாசன கட்டமைப்பை நவீனப்படுத்தும் இரண்டாம் கட்ட திட்டத்தினை செயல்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கியின் (Asian Develo pment Bank) நிதியுதவியை பெற தேவையான ஒன்றிய அரசின் ஒப்புதல்களை பெற மத்திய நீர்வள குழும்ம் (CWC) மற்றும் ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகமும் அவைகளின் ஒப்புதல்களை உடனே அளிக்க வேண்டப்பட்டது.

**2.கோதாவரி - காவிரி இணைப்புத் திட்டம்:**

தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை (NWDA) தயாரித்துள்ள கோதாவரி - கிருஷ்ணா - பெண்ணார் காவிரி இணைப்புக் கால்வாய் திட்டம் தென்மாநிலங்களின் நீர்வளத்தை பெருக்கும் ஒரு முக்கியமான திட்டமாகும். இத்திட்டத்தை உடன் செயல்படுத்த ஒன்றிய அரசின் நீர்வள அமைச்சகம் மற்றும் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை (NWDA), தேவையான அனைத்து நடவடிக்கைகளை காலம் தாழ்த்தாமல் எடுக்க வேண்டப்பட்டது.

**3.காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டம்**

இத்திட்டம் தென்னிந்திய தீபகற்ப நதிகள் இணைப்பு திட்டத்தில் உள்ள 9 இணைப்பு கால்வாய்களில் ஒன்றாகும். இத்திட்டம் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை (NWDA) தயாரித்த திட்ட அறிக்கையின் ஒரு பகுதியாகும். இத்திட்ட இணைப்புக் கால்வாயை உடன் செயல்படுத்தினால் வெள்ள காலங்களில் காவிரி ஆற்றில் வரும் உபரி நீரினை மாயனூரிலிருந்து தெற்கு மாவட்டங்களான புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகரில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் மற்றும் நிலத்தடிநீர் செறிவூட்டலுக்கு பயன்படுத்து வதோடு, டெல்டா பகுதிகளில் வெள்ளத்தால் ஏற்படும் கட்டுமான சேதங்களை குறைக்கவும், வெள்ள சேதத்திலிருந்து நெற்பயிர்களை காப்பாற்றவும் முடியும். அவசியம் கருதி, இத்திட்டத்தை தமிழ் நாடு அரசு 2020லிருந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், இந்த ஆண்டு, 202425, ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பீகார் மாநிலத்தில் உள்ள கோசி - மேச்சி நதிகள் இணைப்புக் கால்வாய் திட்டத்திற்கு இணையானது. காவிரி - குண்டாறு இணைப்பு திட்டத்தின் முதற்கட்ட பணிகளுக்காக ரூ. 6941 கோடி செலவு செய்ய தமிழ்நாடு அனுமதி அளித்து, இதுவரையில் ரூ. 245.21 கோடி செலவு செய்துள்ளது. விரைவில் செயல்படுத்த ஏதுவாக தேவைப்படும் ஒன்றிய அரசின் கொள்கை அளவு ஒப்புதலையும், நிதியையும் அளிக்க ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது.

**4.முல்லைப்பெரியாறு - எஞ்சிய பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்:**

முல்லைப்பெரியாறு அணையிலுள்ள சிற்றணை மற்றும் மண் அணைகளை, 27.02.2006 மற்றும் 07.05.2014 தேதியிட்ட மாண்பமை உச்சநீதி மன்ற ஆணைகளின்படி வலுப்படுத்தவும், பிரதான அணையில் கிரவுட்டிங் (Grouting) செய்யவும், தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் கேரள அரசு இதுவரை ஒத்துழைக்கவில்லை. 15 மரங்களை அகற்றவும் தேவையான அனுமதிகளை வழங்கவில்லை. மேலும், இந்த பணிகளை செய்ய தேவையான கட்டுமான பொருள்களை வனப்பகுதியிலுள்ள சாலை வழியாக எடுத்துச் செல்லவும், அந்த சாலையை சீரமைக்கவும் கேரள அரசு ஒத்துழைக்கவில்லை. அதற்கு, தேவையான அனுமதிகளை வழங்குமாறு கேரள அரசை அறிவுறுத்த ஒன்றிய நீர்வள அமைச்சரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

**5.பெண்ணையாறு பன்மாநில நீர் பிரச்சினைக்கு தீர்வு காண ஒரு நடுவர் மன்றம் அமைத்தல்**

கர்நாடக அரசு தன்னிச்சையாக பன்மாநில நதியான பெண்ணையாற்றின் உபநதியாகிய மார்கண்டேய நதியில், குடிநீர்த் தேவை என்ற போர்வையில் ஒரு பெரிய அணையைக் கட்டியுள்ளது. இச்செயல் 1892 ஆம் ஆண்டு மெட்ராஸ் - மைசூர் ஒப்பந்தத்தை மீறுவதாகும். இது தமிழ் நாட்டிற்கு மிக பாதிப்பை ஏற்படுத்துவதாகும். மேலும், பெண்ணையாற்றின் நீரை நேரடியாக இறைத்து பாசனத்திற்கு பயன்படுத்துகிறது. இச்செயல்களை எதிர்த்து, தமிழ்நாடு தொடர்ந்த வழக்கில் மாண்பமை உச்சநீதி மன்றம் 14.11.2019ல் இப்பிரச்சினைக்கு நடுவர் மன்றத்தை நாட தமிழ் நாட்டை அறிவுறுத்தியது. ஆனால், ஒன்றிய அரசு, இரு மாநிலங்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடத்த 2020ல், ஒரு குழு அமைத்தது. எந்த தீர்வும் காணமுடியவில்லை. ஒன்றிய அரசு நடுவர் மன்றம் அமைக்காமல் காலம் தாழ்த்தி வந்தது. இதற்கிடையே, மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த ஒரு குழுவை, மாண்பமை உச்சநீதி மன்றம் 24.01.2024 அன்று அளித்த ஆணையின்படி, ஒன்றிய அரசு அமைத்தது. இந்த குழு இன்னும் அதன் அறிக்கையை அளிக்கவில்லை. ஆகையால் இக்குழுவின் அறிக்கையை விரைவில் பெற்று, இப்பிரச்சினைக்கு தீர்வு காண உடன் ஒரு நடுவர் மன்றம் அமைக்க ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்தை கேட்டுக் கொள்ளப்பட்டது.

**6.குளங்கள் சீரமைப்பு திட்டத்திற்கு ஒன்றிய அரசின் பங்கு நிதியில் உள்ள நிலுவை தொகையை விரைவில் வழங்க கோருதல்.**

ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் பங்கீட்டுடன் தமிழ் நாட்டிலுள்ள 14,306 குளங்கள் பல கட்டங்களில், 2015 முதல், சீரமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் பங்கில் நிலுவையில் உள்ள ரூ. 212 கோடியை உடனடியாக தமிழ் நாடு அரசிற்கு அளிக்க வலியுறுத்தப்பட்டது.

ஒன்றிய அரசின் நீர்வளத்துறை அமைச்சர் (ஜல் சக்தி) சி.ஆர். பாட்டீல்; ஒன்றிய அரசின் நீர்வளத் துறை (ஜல் சக்தி) இணை அமைச்சர் வி.சோமண்ணா; ஒன்றிய நீர்வளத்துறை (ஜல் சக்தி) இணை அமைச்சர் டாக்டர் ராஜ் பூஷன் சவுத்ரி; ஒன்றிய அரசின் நீர்வளத் துறை செயலாளர் திருமதி. தேவஸ்ரீ முகர்ஜி; மத்திய நீர்வள குழுமத்தின் தலைவர் குஷ்விந்தர் வோரா; தமிழ்நாடு அரசின் டெல்லிக்கான சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை கூடுதல் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன்; தமிழ்நாடு அரசின் கூடுதல் உள்ளுறை ஆணையர் (தமிழ்நாடு இல்லம்) ஆஷிஷ்குமார், மற்றும் தலைவர், காவிரி தொழில்நுட்ப குழுமம் மற்றும் பன்மாநில நதி நீர் பிரிவு ஆர். சுப்ரமணியன் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.